DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 26.06.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 84/2022 |
| Deposition of Witness for Prosecution | : | PW.7 |
| Name | : | ஆனந்த்குமார் |
| Father Name | : | பெரியசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. P. Chandar Rao, Grade III Bench Clerk, of this court, on 26.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(A1 எதிரி ஆஜர். A2 மற்றும் A3 எதிரிகளுக்காக 355 of BNSS Act-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**

**<u>முதல் விசாரணை:-</u>**

தமிழ்நாடு காவல் துறையில் ஏற்காடு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 28.05.2022-ம் தேதி பகல் 13.00 மணிக்கு ஏற்காடு காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சாட்சி வந்தனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 130/2022 சட்டபிரிவுகள் 294(b), 324, 506(i) மற்றும் தமிழ்நாடு சொத்துக்கள் சேதபடுத்துதல் சட்டம் இழப்பிட்டு சட்டம் பிரிவு 3 மற்றும் பிரிவு 4 of TNPWH Act ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு முதல் தகவல் அறிக்கையின் நகலை காவல் ஆய்வாளர் ரஜினி என்பவரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

சம்பவம் நடைபெற்ற தேதி 27.05.2022-ம் தேதி என்றால் சரிதான். மேற்படி புகாரானது எழுத்து மூலமாக பெறப்பட்ட புகார் என்றால் சரிதான். அந்த புகாரினை அ.சா.1 வந்தனா கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் யார் எழுதினார் என்று தெரியாது ஆனால் அதில் அ.சா.1 வந்தனா தான் கையெழுத்து செய்துள்ளார். மேற்படி புகாரை காவல் நிலையத்தில் 28.05.2022-ம் தேதி மதியம் 01.00 மணிக்கு பெற்றீர்கள் என்றால் சரிதான். 27.05.2022-ம் தேதி இரவு அ.சா.1 வந்தனா காவல் நிலையம் ஆஜராகி புகார் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. 28.05.2022-ம் தேதி காலை 09.00 - 10.00 மணிக்கோ மேற்படி வழக்கு சம்மந்தமாக புகார் ஏதேனும் பெற்றீர்களா என்றால் இல்லை. 27.05.2022-ம் தேதி இரவு மேற்படி வழக்கு சம்மந்தமான சாட்சிகளை யாரையும் நீங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் மேற்படி புகாரை பெறவில்லை என்றும், வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கினை தொடர்ந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. R. Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.